# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# ஒரு பிரியமுள்ள மகன் அடிமையாக மாறுகிறான்

எழுதியவர்: Edward Hughes
சித்தரிப்பவர்: Byron Unger; Lazarus
மொழிபெயர்ப்பாளர்: Dr. Dasan Jeyaraj
தழுவியவர்: M. Kerr; Sarah S.

**கதைகள்** 60 **ல்** 7

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*

உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

Tamil

ஈசாக்கு மிகுந்த சந்தோஷமாயிருந்தான். அவன் மகன் யாக்கோபு வீடு திரும்பிவிட்டான். ஏசா தன்னுடைய சகோதரனை கொன்றுவிட முன்பு திட்டமிட்டிருந்தான், ஆனால் இப்போதோ வரவேற்றான்.



1

ஆனால், யாக்கோபின் குமாரர்களோ சந்தோஷமாகயில்லை, ஏனெனில் அவர்களுடைய இளைய சகோதரன் யோசேப்பு, அவர்களுடைய தகப்பனுக்கு செல்லப் பிள்ளையாயிருந்தான்.



2

யோசேப்பு தன்னுடைய சொப்பனங்களை கூறிய போது, யோசேப்பின் சகோதரர்கள் அதிகமாக கோபப்பட்டார்கள். "என்னுடைய அரிக்கட்டுகள் உயரமாக நிற்க என்னுடைய சகோதரர்களுடைய அரிக்கட்டுகள் மரியாதையுடன் குனிந்து நின்றன" என்றான் யோசேப்பு.



3

இந்த சொப்பனத்தின் மூலம் யோசேப்பு தன்னுடைய சகோதரர்களை விட முக்கியமானவனாயிருப்பான் என்று அர்த்தமாகிறது.



4



யோசேப்புடைய இரண்டாவது சொப்பனத்தில், சூரியனும், சந்திரனும் மற்றும் நட்சத்திரங்களும் பணிந்து குனிந்து நின்றன.

5



தன்னுடைய பெற்றோர்களுக்கும் சகோதரர்களுக்கும் மேலாக தன்னை உயர்த்தி காட்டினதினாலே யாக்கோபு கூட கோபப்பட்டான்.

6

யோசேப்புடைய சகோதரர்கள் ஆட்டு மந்தையை மேய்க்க சென்ற இடத்திற்கு யாக்கோபு அவனை அனுப்பினான். அவனுடைய சகோதரர்கள் அவன் வருவதை பார்த்தார்கள்.



7

"இந்த சொப்பனக்காரனை கொன்று போடுவோம்," என்று தங்களுக்குள்ளே பேசினார்கள். தனக்கு வரப்போகிற ஆபத்தை யோசேப்பு அறியாதிருந்தான்.



8


ரூபன், மூத்த சகோதரன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. "நாம் இரத்தம் சிந்தக்கூடாது" என்று அவன் சொன்னான். "பாருங்கள், இங்கே ஒரு குழியிருக்கிறது. அவன் அதிலே சாகட்டும்!" இரவு நேரத்தில் அவனை காப்பாற்றிவிடலாம் என்று ரூபன் யோசித்தான்.
9


யோசேப்பு வந்து சேர்ந்த போது, அவனுடைய சகோதரர்கள் அவனை பிடித்து, யாக்கோபு தன்னுடைய பிரியமான குமாரனுக்கு விஷேசமாக போட்டிருந்த பலவர்ண அங்கியை கழற்றினார்கள்.
10


பின்பு அவனை பயங்கரமான குழியிலே போட்டுவிட்டார்கள்.
11


ரூபன் இல்லாத சமயத்திலே, தூரதேசமாகிய எகிப்துக்கு ஒட்டகங்களுடன் செல்லுகிற நாடோடிகளின் கூட்டம் அந்த வழியாக போகிறதை பார்த்தார்கள். மற்ற சகோதரனாகிய யூதா,
"யோசேப்பை விற்று போடுவோம்," என்றான்.
12


பேரம் பேசி முடிந்தது. யோசேப்பை அவர்கள் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள்.
13


தன்னுடைய குடும்பத்திலிருந்தும், சொந்த தேசத்திலிருந்தும், ஒட்டகக்கூட்டமானது தன்னை பிரித்து அழைத்து செல்வதை உதவியற்றவனாய் கண்ணீரோடும், பயத்தோடும் யோசேப்பு பார்த்தான்.
14



"இது யோசேப்பின் அங்கியா? இதில் இரத்தம் படிந்திருக்கிறது. இதை நாங்கள் வனாந்திரத்திலே கண்டெடுத்தோம்." யாக்கோபுடைய பிரியமான மகனை வன விலங்குகள் கொன்று போட்டன என்று அந்த கொடூர சகோதரர்கள் நம்பவைத்தார்கள்.

15



யாக்கோபு தன்னுடைய உடைகளை கிழித்துக்கொண்டு, துக்கமாய் அழுதான். யாராலும் அவனை ஆறுதல் படுத்த முடியவில்லை.

16



எகிப்திலே, யோசேப்பு பயத்துடனும், தனிமையுடனும் காணப்பட்டிருக்கலாம். ஒருவேளை வீட்டிற்கு போக வேண்டுமென ஆசைப்பட்டிருக்கலாம். ஆனால் அவனால் தப்ப முடியவில்லை.

17



எகிப்திலே, ஒரு முக்கியமான மனிதனாகிய போத்திபார் வீட்டிலே அவன் அடிமையாக இருந்தான். யோசேப்பு எப்போதும் ஒரு கடின உழைப்பாளி, அவனை நம்பலாம் என்று போத்திபார் கண்டார்.

18

"நீ செய்வதெல்லாம் வாய்க்கிறது, தேவன் உன்னோடு இருக்கிறார். நீ என்னுடைய பிரதான வேலைக்காரனாயும், என்னுடைய எல்லா வியாபாரத்திற்கு பொறுப்பாயும், எல்லா வேலைக்காரர்களுக்கும் அதிபதியாகவும் உன்னை நியமிக்கிறேன், " ...



19

... என்று ஒருநாள் போத்திபார் யோசேப்பினிடத்தில் கூறினான்.



20

யோசேப்பின் நிமித்தமாக போத்திபாருக்கு நல்ல அறுவடையையும், அநேக ஐசுவரியங்களையும் தேவன் கொடுத்தார்.




யோசேப்பு பெரிய மனிதனாக மாறினாலும், தேவனை நம்பி அவருக்கு உண்மையுள்ளவனாயிருந்தான். ஆனாலும் யோசேப்புக்கு தொல்லை வந்தது.




போத்திபாரின் மனைவி துர்க்குணம் படைத்தவளாயிருந்தாள். அவள் அவனை அவளுடைய கணவன் ஸ்தானத்தை எடுக்கச்சொன்னாள்.




யோசேப்பு மறுத்தான், போத்திபாருக்கு விரோதமாக குற்றம் புரிந்து தேவனுடைய முன்னிலையில் பாவம் செய்ய விரும்பவில்லை.




அந்தப் பெண் அவனைப் பிடித்து, வலியுருத்தியபோது, அவன் அங்கேயிருந்து ஓடிவிட்டான். ஆனால் அவள் அவனைப் பிடித்து அவன் வஸ்திரத்தை எடுத்துக்கொண்டாள்.




"உம்முடைய வேலைக்காரன் என்னைத் தாக்கினான். இங்கே அவனுடைய வஸ்திரத்தை பாருங்கள்," என்று போத்திபார் மனைவி முறையீடு பண்ணினாள். போத்திபாருக்கு கோபம் வந்தது.















ஒரு பிரியமுள்ள மகன் அடிமையாக மாறுகிறான்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

ஆதியாகமம் 37, ஆதியாகமம் 39

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது."  சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார்.  பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார்.  இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார்.  இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும்.  நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும்.  ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.